I Additional District Court, Thoothukudi.

O.S.No.84/2022 நாள் : 25.06.2026

பி.சா.1– திரு. சாம் விக்டர் ஞானமுத்து

குறுக்கு விசாரணை :–

என் தகப்பனார் எம்.எஸ். அருணாசல நாடார் தூத்துக்குடியில் ஒரு முக்கிய பிரமுகர் என்றால் சரிதான். அவருக்கு வாதியும், 1 முதல் 9 பிரதிவாதிகளும் வாரிசுகள். 2ம் பிரதிவாதி வழக்கு நிலுவையில் இருக்கும்போது இறந்துவிட்டதால் அவரது வாரிசுகளாக 10 முதல் 12 பிரதிவாதிகள் சேர்க்கப்பட்டார்கள். என் தகப்பனார் 2006 ல் இறந்துவிட்டார். என் தாயார் 2022 ல் காலமானார். என் பெற்றோர் சேர்ந்து வா.சா.ஆ 2 உயிலை 16.09.2005 ல் எழுதினார்கள் என்றால் சரிதான். என் பெற்றோர் ஆயுளுக்குப் பிறகு சொத்து குறித்து குடும்பத்தில் பிரச்சனை வரக்கூடாது என்று உயில் எழுதி வைத்தார்கள் என்றால் சரிதான். உயிலின் படி என் பெற்றோர் அவர்களின் பிள்ளைகள் அனைவருக்கும் சொத்துக்களை எழுதி வைத்துள்ளார்கள் என்றால் சரிதான். இந்த தாவா சொத்து வா.சா.ஆ 2 ல் 3 ம் தபசில் சொத்து என்றால் சரிதான். உயில் தங்களது ஆயுட்காலத்திற்கு பிறகு அமலுக்கு வரவேண்டுமென்று என் பெற்றோர் எழுதி வைத்தார்கள் என்றால் சரிதான். என் தாயார் உயிருடன் இருக்கும்போது அவரிடம் கையொப்பம் பெற்று உயில் சொத்துக்கள் சிலவற்றை விற்றுவிட்டார்கள். வா.சா.ஆ 2 உயிலை என் பெற்றோர் மாற்றி எழுதவில்லை. அது என் பெற்றோர் எழுதிய உயில் ஆவணம்தான். உயிலில் என் பெற்றோர் தங்களது ஆண், பெண் மக்கள் அனைவரும் சமமாக அடைந்து அனுபவித்து வரவேண்டியது என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் உயிலில் கண்டபடி தாவா சொத்தை நாங்கள் அனைவரும் சமமாக பிரித்துக் கொள்வதில் எனக்கு ஆட்சேபனை

உண்டா என்றால் என் பெற்றோர் உயிருடன் இருக்கும்போது அவர்களை நான் நல்லபடியாக பராமரித்து வந்ததால் தாவா சொத்தை எனக்கு வாய்மொழியாக கொடுத்துவிட்டார்கள். அந்த விபரம் என்னுடன் பிறந்தவர்களுக்கு தெரியும். அதை மற்ற தரப்பினர்கள் ஆட்சேபிக்கவில்லை. ஒரு சொத்தை வாய்மொழியாக கொடுத்தால் செல்லாது என்று சிலபேர் சொல்லி கேள்விப்பட்டிருக்கிறேன். வாய்மொழியாக ஒரு சொத்தை கொடுத்தால் அது செல்லுமா, செல்லாதா என்றால் எனக்குத் தெரியாது. உயில்படி எனக்கு வந்த ஒரு சொத்தை அதாவது விமான நிலையம் அருகில் உள்ள 5.95 ஏக்கரில் என் 1/4 பங்கை உயில்படி கிடைத்ததாக சொல்லி வேலவன் ஹைப்பர் மார்க்கெட்டிற்கு கிரையம் செய்தேன் என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரத்தின் பதிவு நகல் **வா.சா.ஆ 12**. என்னிடம் காட்டப்படும் ஆவணம் வாதி, நான், 2ம் பிரதிவாதி, என் தாயார் சேர்ந்து ஒரு எஸ்தர் பியூலா என்பவருக்கு நாங்கள் விற்றதற்கான பத்திரத்தின் நகல் என்றால் சரிதான். அதன் பதிவு நகல் **வா.சா.ஆ 13**. வா.சா.ஆ 13 சொத்து உயிலில் குறிப்பிடப்படவில்லை. ஆனால் உயில்படி சொத்து வந்ததாக வா.சா.ஆ 13 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.06.25 19:44:14 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.